பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலைரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

# வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 13 வியாழக்கிழமை (29-8-2002) தொலைபேசி 3378 ஒலி 253

★ அரசு - புலிகள் வசமுள்ள

# யுத்தக் கைதிகளின் பரிமாற்றம்
# செப் 16க்கு முன்னர் இடம்பெறும்!

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(நமது நிருபர்)

**அரசும் விடுதலைப்புலிகளும் தடுத்து வைத்துள்ள யுத்தக் கைதிகளை செப்ரம்பர் மாதம் 6ந் திகதிக்கும் 16ந் திகதிக்கும் இடையில்பரிமாறிக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கைதிகளின் பெயர்ப்பட்டியல்களை இரு சாராரும் தந்துள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கபேச்சாளர் சுகுமார் றொக்வூட் தெரிவித்துள்ளார்.**

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செப்ரெம்பர் 16ஆம் திகதி தாய்லாந்தில் முதற் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் படவுள்ளது.

இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன் விடுதலைப் புலிகள் மீதான தடையை அடுத்த மாதம் நீக்குவதாக அரசு அறிவித்துள்ளதை அடுத்து புரிந்துணர்வுஅடிப்படையில்யுத்தக் கைதிகளின் பரிமாற்றம் இடம் பெறவுள்ளது.

யுத்தக் கைதிகளின் பரிமாற்றம் தொடர்பாக அரசின் சமாதான செயலணிப் பணிப்பாளர் பேணாட் குணதிலகா கடந்த சனிக்கிழமை வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார். இதனை அடுத்து விடுதலைப் புலிகள் தமது தரப்பைச் சேர்ந்த 23 கைதிகளின் பெயர்ப் பட்டியல் ஒன்றை சமர்ப்பித்திருந்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்தது போல், சாகரவர்த்தனா கப்பல் மாலுமி போயகொட உட்பட ஏழு கைதிகள் மாத்திரம் தம் வசம் உள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள யுத்தக் கைதிகள் பரிமாற்றம் வவுனியா ஓமந்தையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசும், விடுதலைப்புலி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு- கண்காணிப்புக்குழு புலிகளுடன் நேற்றுசந்திப்பு

மட்டு- அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக்குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்குமிடையேயான சந்திப்பொன்று நேற்று மாலை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு- அம்பாறைப் பிராந்தியப் பொறுப்பாளர் கௌசல்யன் அம்பாறைப் பொறுப்பாளர் பாபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஞாயிறு இரவு, செவ்வாய் இரவு ஆகிய இரு தினங்களிலும் வாழைச்சேனை பொலநறுவை ஊடான மியாங்கொட வீதி விடுதலைப் புலிகளால் மூடப்பட்டதாகப் படைத்தரப்பினர் தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது:

அத்துடன் எதிர்வரும் முதலாந்திகதி முதல் 5 ம் திகதி வரை விடுதலைப் புலிகளின்

(8 ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நீக்கம் வங்கி அமைப்பை ஏற்கிறது

### ஜே. வி. பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள மீதான தடையை எந்தவிதமான நிபந்தனையுமின்றி நீக்குவதன் மூலம், விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப் பட்டு வரும் வங்கிகள் மற்றும் வரிகளை அரசாங்கம் அங்கீகரிப்பதாக அமைந்துள்ளதென ஜே. வி. பியின் பிரசாரச் செயலாளர் வீமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்;

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை என்று கூறிக் கொண்டுநாட்டை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளது.

(8 ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆட்பலத்தை அதிகரிக்க இளைஞர்யுவதிகள்முன்வரவேண்டும்

### அரசியல் பிரமுகர் பாவலன் உரை

(ஈச்சமோட்டை)

எம்மக்கள் அனைவரதும் ஒன்றுபட்ட எழுச்யேநிரந்தர

கால அரசியல் விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப்புலிகளின்

என்பதுதான் பொருள் நாம் சகலநிலையிலும் பலமாகஉள்ளோம் தமிழீழ விடுதலைப்

## அரசு மீதானநம்பிக்கைப்

(ஈச்சமோட்டை)

எம்மக்கள் அனைவரதும் ஒன்றுபட்ட எழுச்சியே நிரந்தரமான தீர்வுக்கு வழிசெய்யும் எனவே நாமனைவரும் எமது இலக்கை அடைவதற்காக பலமாகநின்று எழுச்சிபெற வேண்டும்.

அண்மையில் ஈச்சமோட்டை பகுதியில் இடம்பெற்ற சமகால அரசியல் விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப்புலிகளின் அரசியற்பிரமுகரானபாவலன் மேற்கண்டவாறு அறை கூவல் விடுத்தார்-

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானமேசைக்கு வருகிறார்களென்றால் அவர்கள் மிகவும்பலமாகஉள்ளளார்கள் என்பதுதான் பொருள் நாம் சகலநிலையிலும் பலமாகஉள்ளோம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் கண்டு அதிர்ந்து போன அரசாங்கமே எம்முடன்பேச்சு வார்த்தைக்கு வந்துள்ளது.

நாம் எமது தலைவனின் உறுதியான வழியிலேயேசெல்

(2-ம் பக்கம் பசர்க்க)

# அரசு மீதானநம்பிக்கைப் பிரேரணை விவாதம்இன்று

## பார்வையாளர்களுக்குத் தடை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பிரேரணை இன்று பாரளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கெள்ளப்படவுள்ளது.

நம்பிக்கைப் பிரேரணை இன்று பாராளு மன்றில் கொண்டுவரப் படுவதை அடுத்து பாராளுமன்றப் பார்வையாளர் மண்டபத்திற்குள் எவரும் அனுமதிக்

(8-ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகசபையில் பிரதி முதலமைச்சர்பதவி எமக்கே!

## ஸ்ரீ.மு.காங்கிரஸ் அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபையில் பிரதி முதலமைச்சர் பதவியும் ஓர் அமைச்சர்பதவியும் தமக்கு வழங்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால நிர்வாக சபை என்றபோர்வையில் அரசாங்கம் தனிநாட்டிற்கு அத்திவாரம் இட்டுள்ளது. இதனால் முஸ்லிம் மக்கள் எல்லாவித உரிமைகளையும் இழக்கநேரிட்டுள்ளது.

புலிகள் வடக்குகிழக்கில் தனிநாட்டு அரசிற்கு ஏற்ப நிர்வாகக் காரியாலயங்கள் வரிஅறவீடு பிரத்தியேக பொலிஸ்நிலையம் நீதிமன்றங்கள், வங்கிகள் புனர்வாழ்வுக் சழகங்களை அமைத்து செயற்படுகின்றனர் இதனால் முஸ்லிம்களின் நிலைகேள்விக்குறியாக உள்ளது-

இந்த நாட்டில் வடக்கு கிழக்கு இணையாமல் மாகாணசபை ஆட்சிமுறைஏற்படுத்தப்பட வேண்டும் அப்போதுதான் தமிழ் முஸ்லிம் மக்கள் பேதமின்றி சமஅந்தஸ்துடன் வாழமுடியும்,

இடைக்கால நிர்வாகசபையில் தமிழர்களுக்குச் சமனான எந்த வகையிலும் குறைவு படாத சமஉரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் முஸ்லிம்மக்கள் சார்பாக வலியுறுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(த)

# கிரிக்கெற் வீரர் முரளி 31இல் யாழ் வருவார்

(சுண்டுக்குளி)

இலங்கைக் கிரிக்கெற் அணியின் சுழல்ப் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தலைமையிலான கிரிக்கெற் அணியினர் நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம்வருகை தரவுள்ளனர்.

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள சிநேகபூர்வ கிறிக்கெற்போட்டி ஒன்றில் கலந்துகொள்ளும்பொருட்டே இவர்கள் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 50ஓவர்களைக் கொண்டஒரு நாள் போட்டியில் இவர்கள் பங்குபற்றுவர்.

முத்தையா முரளிதரன் தலைமையில் யாழ் வரும் இக்குழுவில் கிரிக்கெற் பயிற்றுவிப்பாளர் அன்டல்காசிம் வீரர்களான லக்கிறோக பெனாண்டோ, முடித்த பெனாண்டோ, டாமிகராஜபக்ஷ, சண்ஜய ராஜபக்ஷ றங்கடயஸ் உட்பட பலர் வருகைதருகின்றனர்.

(த-110)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் இயங்கும் தொலைத்தொடர்பு நிலைபத்திற்கு பணிபுரிய பெண்பிள்ளை தேவை. ஆங்கிலம் சிறிதளவு தெரிந்தால் நல்லது. நேரில் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரப்பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. 306 மே-பா வலம்புரி யாழ்ப்பாணம். (C- 4895)

### அமைய ஊழியர்கள் 6 பேருக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் அமைய அடிப்படையில் கடமையாற்றி வந்த 6 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

சே. இராச (யாழ்.மத்திய கல்லூரி), எஸ். மரியதாஸ் (வேம்படி மகளிர் கல்லூரி), எம். மகாராஜ் (யாழ். இந்துக் கல்லூரி), கே. மகேந்திரன் (யாழ் மத்திய கல்லூரி), ரி ரஜீவன் (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வி சுசிலா விஜயரட்ணம் (சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ஆகியோருக்கே நிரந்தர நியமனக் கடிதங்கள் வந்துசேர்ந்துள்ளன. (உ-19)

### முற்றுகை

(கொழும்புத்துறை)

குருநகர் சொலமோன் வீதியில் இயங்கி வந்த கசிப்பு விற்பனை நிலையங்கள் நேற்றுமுன்தினம் 12 மணியளவில்கடந்த 27ஆம் திகதி மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் முற்றுகையிடப்பட்டன.

அங்கிருந்த பெருமளவு கசிப்பு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. (உ-262)

## சுதந்திரமான நடமாட்டத்தைஉறுதிசெய்க
# மாபெரும் மறியல் போருக்கு
# வடமராட்சி மக்கள் தயார்

(மந்திகை)

பருத்தித்துறை நகரிலுள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள வீதிகளை திறந்து, முகாமினுள் அமைந்துள்ள 15 அரச, தனியார் கட்டடங்களிலுள்ள படையினர் வெளியேறுவதுடன், இந்து ஆலயங்கள், பாடசாலைகளுக்கு சுதந்திரமாக சென்றுவரவழிவகை செய்யக் கோரிமாபெரும்மறியல்போர் விரைவில் நடத்தப்படவுள்ளது.

யாழ் குடாநாட்டினை படையினர் கைப்பற்றிய வேளை பருத்தித்துறை நகரிலுள்ள இறங்குதுறையை மையமாகவைத்து 524 பிரிகேட்டினுடைய கட்டளைப் பீடமும் வடமராட்சி சிவில் நிர்வாக காரியாலயமும்இங்கு அமைக்கப்பட்டன.

இம்முகாமினுள் ஹாட்லிக் கல்லூரிமெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, தபாலகம், அரசமருந்தகம், கொட்டடி சித்திவிநாயகர் ஆலயம், கோட்டுவாசல் அம்மன் கோவில், வை. எம். சு. ஏ. தேவாலயம், நகரசபை, பலநோக்கு கூட்டுறவுசங்க தலைமைக்காரியாலயம், எரிபொருள் விற்பனை நிலையம், நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மறியல்சாலை, நீதிவான் வாசஸ்தலம், சுங்கத்திணைக்களம், சுங்கஅதிகாரிகள் விடுதி என்பன அடங்குகின்றன.

அத்துடன் 751-ம் இலக்கப் பேருந்துப் பாதை கடற்கரை வீதி, காங்கேசன்துறை வீதி, கல்லூரி வீதி, போன்ற வீதிகளும் இதனால் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை ஆகிய இரு பாடசாலைக் கட்டடங்களிலிருந்து மட்டும் படையினர் வெளியேறியுள்ள போதிலும் பாடசாலைச் சுற்றாடலி உள்ள இராணுவ வேலி, சோதனை நிலையம் என்பன இன்னமும் அகற்றப்படவில்லை.

இந் நிலையில் தமது சுதந்திர நடமாட்டத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் பாடசாலை மாணவர்களும், கடற்றொழிலாளர்களும் வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினரும் இணைந்து மாபெரும் மறியல் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது. (உ-23)

### புலிகளின்

கின்றோம் அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சொன்னார் போர்என்றால் போர் சமாதானமென்றால் சமாதானம் என்று அதையே நாம்இப்போதும் தெளிவாகக்கூறுகிறோம்

எமது மக்களின் விடுதலைக்காக நாம் செய்த தியாகம் அளப்பரியது 17ஆயிரத்திற்கும்அதிகமான மாவீரர்களை நாம் எமதுமண்ணில் ஆகுதியாக்கினோம்.

நாமின்று சமாதானத்தின் பாதையில் உறுதியாகவே இருக்கிறோம் எந்தவித காரணம் கொண்டும் எமதுதரப்பால் சமாதானத்துக்கு ஊறு ஏற்படாது.

ஆனையிறவு அக்கினிச்சுவாலை, கட்டுநாயக்கா விமானத் தளத்தாக்குதல் ஆகியசமரில் புலிப்படையின் வீரதீரம் கண்டு சிங்கள அரசுமட்டுமல்ல உலகமே அதிர்ந்தது நாம் பலமான படையாகவே வளர்ந்து நிற்கின்றோம்.

தமிழனின் படைப்பலம் நிலைப்படுத்தப்படும் போதே எமதுஉரிமைகளை நாம்பெற்றுக்கொள்ள முடியும் மானத் தமிழர்கள் நாம்; நாம்தமிழர்களாகப் பிறந்தமையையிட்டு பெருமைப்படவேண்டும்.

எனவே எமதுஆட்பலத்தை அதிகரிக்க தமிழ் இளைஞர் யுவதிகள் முன்வரவேண்டும்.

இன்று பல்வேறுவிதமான கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றன இதனால்இளம் சமுதாயம் பெரிதும்நற்பண்புகளை இழந்து வருகின்றது எனவே பெரியவர்கள் இவர்களைச் சீர்திருத்த முன்வர வேண்டும்.

மக்கள் சக்தியே மாபெரும் சக்தி அரசியல், படைபலம் கலாசாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் நாம் ஒன்றுபட்டு எழுச்சிபெற வேண்டும் மக்கள் எழுச்சியே இன்றுஅவசியமானது என்று குறிப்பிட்டார்.

(உ-59)

## சி. ஐ. டி. பொலிஸாரை
# செம்மணிப் புதைகுழி விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

செம்மணிப் புதை குழிகள் தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் சி.ஐ.டி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கையை எதிர் வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அவ் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, இந்த விசாரணை அறிக்கை, ஆலோசனை பெறும் பொருட்டு சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென சி.ஐ.டி. பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

செம்மணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களின் மரபணுப் பரிசோதனை (டி.என்.ஏ) மூலமான அறிக்கைகள் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த 6 இராணுவத்தினரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# யாழ்., கிளி. மாவட்டங்களுக்கு வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கு

(தென்மராட்சி)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளுக்கு என இவ்வருடம் ஒதுக்கப்பட்டுள்ள நிதிவிபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு 1 கோடியே 55 ஆயிரம் ரூபாவும் பளைப் பிரதேச செயலகத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் மருதங்கேணிக்கு 4 லட்சம் ரூபாவும், பருத்தித்துறைக்கு ஒரு கோடியே 6லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் கரவெட்டிக்கு 2 கோடியே எட்டுஇலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாவும் தென்மராட்சிக்கு3 கோடியே ஒரு லட்சம் ரூபாவும்,

வலிகாமம் வடக்கிற்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கோப்பாய்க்கு 1 கோடியே 4 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் உடுவிலுக்கு 7 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் மேற்குக்கு ஒரு கோடியே 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய்க்கு ஒரு கோடியே 4 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் நல்லூருக்கு 3 கோடியே 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் வேலணைக்கு 6 கோடியே 65 ஆயிரம் ரூபாவும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு 2 கோடியே2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதி ஒதுக்கீடுகளுக்கான வேலைத்திட்டங்கள் யாவும் இவ்வருடம் முடிவடைவதற்கு முன் அமுல் செய்யப்பட வேண்டியவையாகும். தவறும் பட்சத்தில் ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரிக்கு திருப்பி அனுப்பிவிடப்படும் எனவும் தெரிய வருகின்றது. (உ-77)

## மீனவக் குடும்பங்கள் நீரினைப் பெற அலைச்சல்

(மந்திகை)

தென்மராட்சியின் கரையோரப்பகுதிகளில் உள்ள மீனவக்குடும்பங்களுக்கு பருத்தித்துறை பிரதேசசபையினால் விநியோகிக்கப்பட்ட குடிநீர் கடந்த இருவாரங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மீனவக்குடும்பத்தினர் குடிநீரினைப் பெறுவதில் கஷ்ரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

வாரத்தில் இருதடவை மேற்படி கிராமங்களில் வைக்கப்பட்டிருந்த கொள்கலன்களில் நிரப்பப்பட்டுவந்தது, தற்போது இவ் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது

வெப்பத்தின்அளவு அதிகரித்துள்ளதால் இப்பகுதியிலுள்ள கிணறுகளிலும் நீர்வற்றியுள்ளது. (உ-23)

## பிரதேச செயலர் பிரிவு தோறும்
# முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்படும்

(சுதுமலை)

முதியவர்களைகுடும்பச்சூழலில் இருந்து தனிமைப்படுத்துவதை இயலுமான வரையில் தவிர்க்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்கள ஆணையாளர் சகல பிரதேச செயலர்களுக்கும் தனித் தனியே அனுபபி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

வடக்கு- கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் அண்மையில் முதியோர்மத்தியில்நடத்தப்பட்ட ஆய்வின் மூலம்முதியோர் இல்லத்தில் வசிப்பதை விட அவர்கள் குடும்பச் சூழலில் வசிப்பதையே அதிகம் விரும்புகின்றனர் என்பது தெரியவந்துள்ளது

இதன் பிரகாரம் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் அவர்களுக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றினைசனசமூகநிலையங்கள்கிராம அபிவிருத்திச்சங்கங்கள் என்பவற்றின்ஆதரவுடன் அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

இதற்கு வேண்டிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் சமூக சேவை திணைக்களம் வழங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-252)

### வருடாந்த உற்சவம்

வதிரி உல்லியனெல்லை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (உ)

### வீரர்கள் கொழும்பு செல்வர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10ந்திகதி முதல் 14ந்திகதிவரை மாத்தறையில் நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு மாகாண மட்டபோட்டிகளில் கலந்துகொள்ளும் யாழ்மாவட்ட வீரர்கள் 16 பேர் நாளையதினம் பயிற்சிகளின் பொருட்டு கொழும்பு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (உ-26)

## சமாதான முன்னெடுப்புகள் தொடர்பில்
# தெளிந்த சிந்தனையுடனேயே ஜனாதிபதி செயற்படுகிறார்
## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாடு தெளிவற்றது.

இவ்வாறு தெளிவற்றதும் உண்மைக்குப் புறம்பானதுமான செய்திகளை ஊடகங்கள் சில வெளியிட்டு வருகின்றன. இது எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புக்களைநாம் எதிர்க்கவில்லை

புரிந்துணர்வு ஒப்பந்த கைச்சாத்து ஜனாதிபதியின் ஒப்புதல் இன்றியே நடந்தது.

2000ஆம் ஆண்டில், தமிழர்களுக்கு உரிமை வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பை எதிர்த்தவர்கள் இன்றையஆட்சியாளர்களே,

அரசியலில் ஸ்திரதன்மை வேண்டி ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றுள்ளது. (உ)

### ஆங்கிலதின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டஆங்கிலதின எழுத்துப்போட்டிகள் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிவெள்ளிக்கிழமை யாழ்.மேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ-19)

## நல்லூரான் திருவடிக்கு-17



### நாளும் எமைக்காப்பான்

அல்லல் போக்கிடுவான் ஆறுமுகன் குகனாவான்
இருகையும் தொழுமடியார்க்கு ஈடிலாபேரருள் புரிவான்
உயர்ந்தோர்கள் தாழ்ந்தோர்கள் ஊரில் உள்ள நல்லோர்க்கும்
என்றும் துணைநின்றே ஏற்றன யாவும் தருவான்
ஐங்கரனார் தம்பியாய் ஒப்பில்லா மாமணியாய்
ஓங்கு நன்நெறிதன்னை ஔவைக்கு உணர்த்தியவன்
அண்டினோர் யாவர்க்கும் நல்லருள் புரிகின்றவன்
நல்லைக்குமரனவன் நாளும் எமைக்காத்திடுவான்

நீர்வை மணி

### விக்கினத்தைத் தீராயோ?

தத்து வத்தின் தனித்துவமே!
தலை காக்கும் சத்தியனே!
உத்தமனே! உன் நினைவால்
உளமெல்லாம் உருகு தையா!
பத்தியினால் உனை யென்றும்
பரவிக் களிக் கின்றோம்
வித்தகனே! விரைந் தெமது
விக்கினத்தைத் தீராயோ?

தென் நல்லை கு.பகீரதன்

### இனிமைகள் அளிப்பாயே!

அழகிற்கு அகராதியாய்
ஆனந்தப் பொருளாய்
அருவமும் உருவமுமாய்
ஆறுபடை வீடுகளில்
ஆண்ட அருள் வள்ளலே!
சங்கம் முதல் இங்குவரை
குமரனென குறித்து வரும் பொருளே!
ஈரவிழிகள் துடைத்தெமக்கு
இனிமைகள் அளிப்பாயே!

தென்மட்டுவில்-தமிழிதயம்

### துயர் போக்க வருவாயா

சரவணப் பொய்கையில் உதித்த ஆறுமுகவா
தாய் உமையிடம் வேல்பெற்ற குமரா
சூரன் உடல் சிதற வேல்விட்ட வேலா
எம் துயர் போக வருவாயா நல்லைக் கந்தா?

நித்தம் நித்தம் உன்நாமம் உன்பதியில் கேட்க
சுற்றி சுற்றி வரும் அடியார்கள் கூட்டம்
கந்தனே குகனே என்று கதறி ஓலமிட
பத்தர்களைக்காக்க மனம் இல்லையோ

பிரகாஷினி

### கொடி நாட்டுவான்

நல்லை நகருறை ஆறுமுகன்
நமக்கென்ன குறையென்று கூறும் குகன்
தொல்லை வினைகளைப் போக்கு முகன்
தோகை மயிலேறி ஆளும் குகன்

எல்லையில் துன்பங்கள் தனை ஓட்டுவான்
இனிவரும் காலத்தின் வழி காட்டுவான்
அல்லல்கள் அகலவே அருள் கூட்டுவான்
அருந்தமிழ் வாழவே கொடி நாட்டுவான்!

நயினை-இராகுலன்

### தண்டு பாணி தரித்த தென்சொலாய்

விண்ணோர் வாழ்த்த மண்ணோர் வலங்கொள்வர்
பண்ணார் பாடல் பத்தர் பாடுவர்
சண்முக நாதா நல்லூர் சாரு நீ
தண்டு பாணி தரித்த தென்சொலாய்

சிவசண்முக வடிவேல்

# குடாநாட்டில் ஆசிரியர்கள் பற்றாக்குறை குறைவாகவே உள்ளது

## ஆசிய அபி வங்கி திட்டமிடல் நிபுணர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பெரும்பான்மையான பாடசாலைகளில் ஆரம்பமற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடுநீண்டகாலமாக இருந்து வருவது குறித்து குடாநாட்டு கல்வியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் பெரும் விசனம் தெரிவித்துவருகின்றனர்.

இத்தட்டுப்பாட்டினைநீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கானமுயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

நேற்றுமுன்தினம்யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்திருந்த உலகவங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகளிடம் இது விடயம் பற்றி 1ஏ.பி. அதிபர்களும், வடமாகாண அதிபர்சங்கமும் எடுத்துக்கூறி இருந்தனர்.

ஆயினும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் இது அரசின் பணியாகும் எனவும் அவ் அதிகாரிகளால் கூறப்பட்டது.

ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு குடாநாட்டில் மட்டுமல்ல நாடு முழுவதுமேநிலவிவருகின்றது. இருப்பினும் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போதுயாழ்ப்பாணத்து நிலைமை நன்றாகவேயுள்ளது என ஆசிய அபிவிருத்தி வங்கியின்திட்டமிடல்நிபுணரான எம்.திருச்செல்வம் குறிப்பிட்டார்.

உலகவங்கியோ அல்லதுஆசிய அபிவிருத்தி வங்கியோ நாட்டில் ஆட்சியைநடத்துவதற்கு நிதியுதவி வழங்கும் வழக்கம் இல்லை. திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு திட்ட நிதியில் 70சதவீதத்தினையே நாம் வழங்குகின்றோம். மீதி 30 சதவீதத்தினை அரசு பொறுப்பேற்கவேண்டும். அத்தோடு நாம் வழங்கும் நிதி அரசுக்குக் கடனாகவே வழங்கப்படுகின்றது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் தப்பான எண்ணம் நிலவிவருகின்றது எனத் தெரியவருகின்றது.குடாநாட்டுப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக்கல்வி மற்றும் ஆங்கிலக் கல்விக்கான ஆசிரியர்களை நியமிக்கும் விடயம் முழுக்க முழுக்க அரசின் பணியாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-77)

### உயர் தொழில் நுட்ப அரையாண்டு இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் 2002 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டிற்குரிய அனைத்து இறுதி வருட மாணவர்களுக்கான அரையாண்டு இறுதிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குரிய நேர சூசிகளை அடுத்தவாரமளவில் மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (த-5)

### நல்லூர் ஆலய வீதியில் புலிகளின்குரல்ஏற்பாட்டில் சிறப்புக் கலையரங்கம்

(யாழ்ப்பாணம்)

விடுதலை வேள்வியில் ஆகுதியாகிய தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தில் புதிய பரிணாமத்தைப் படைத்த லெப்ரினன் கேணல் திலீபன் ஆகியோரின் நினைவாக, நல்லூர் திருவிழாவையொட்டி புலிகளின் குரல் நிறுவனத்தால் சிறப்புக் கலையரங்கம் நடத்தப்படவுள்ளது:

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரையான 5 தினங்கள் நல்லூர் வீதியில் இடம்பெறவுள்ள இச் சிறப்புக் கலையரங்கத்தில் தமிழீழத்தின் புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். (உ)

### தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசஇந்துப்பேரவை 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் நல்லூர் உற்சவகால தெய்வீக நிகழ்ச்சியில் இன்று 'ஜாதியை வென்ற சன்மார்க்கம்' என்ற பொருளில் தர்மதீபம் தவத்திரு ப. சிவலோகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-3)

### முன்பள்ளிஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி திருமலையில் 3தினங்கள்

(சுதுமலை)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில்உள்ள உள்ளூராட்சிமன்றங்களின் கீழ் செயற்படும் பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கானசேவைக்கால பயிற்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24,25,26ஆம் திகதிகளில் திருகோணமலை உள்ளூராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக உள்ளூராட்சி மன்றப் பணிப்பாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில்பங்கேற்க வடக்கு-கிழக்குப்பகுதிகளைச் சேர்ந்த 40 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு தனித் தனியாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இச்சேவைக்கால பயிற்சி நெறி,நவீன கல்வி திட்ட முறைகளின் அடிப்படையில் பாலர்களின் கல்விச் செயற்பாடுகள் எவ்விதம் அமைய வேண்டும் என்ற எண்ணக்கருவை மையமாகக்கொண்டு நடத்தப்படவுள்ளது. (உ-252)

### இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் மகாபாரதத் தொடர் இசைப் பேருரை இன்று 'பகாசூரன்வதம்'' என்னும் பொருளில் இடம்பெறவுள்ளது. (உ-3)

### இலங்கையில் போதைப்பொருள் தடுப்பு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின்போதைப் பொருள் தடுப்பு திட்டத்திற்கு அமெரிக்க அரசாங்கம் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கொழும்புதிட்டச்செயலகத்தின்செயலாளர்நாயகம் கலாநிதி யு. சரத்சந்திராவிடம், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் இதற்கான காசோலையை வழங்கியுள்ளார்.

சட்டவிரோதப் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது

கொழும்புத்திட்டத்தின் போதைப்பொருள் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் 1972 ஆம் ஆண்டு அமெரிக்க நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்குஅமெரிக்கா சென்ற வருடம் 4 இலட்சம் டொலர்களை வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று அண்ணா சிலையடி வி.க. எதிர்,சிறுப்பிட்டிகலையொளி வி.க. ஆகியன மோதவுள்ளன.

* ★ ★

கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத்தில் (செற்றப்கேம்) இன்று இரவு 8.00 மணிக்கு விக்னேஸ்வரா வி. க. எதிர், ஆவரங்கால் மறு வி. க. ('பி'பிரிவு) ஆகியன மோதவுள்ளன. (உ-3)

### நாவலர்வீதியை திருத்துக சிற்றம்பலம் வி. க. முதல்வருக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாலாம்சந்தி தொடக்கம் மாம்பழம் சந்தி வரையான நாவலர் வீதியைத் திருத்தத் தவறும்பட்சத்தில் யாழ். மாநகரசபைக்கு முன்னால் மறியல்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் யாழ். மாநகரமுதல்வர் எஸ். கந்தையனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், வீதியைத் திருத்துவதற்கு எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, (உ)

## பீடாரோகண விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 36 வது பீடாரோகண விழா நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை பஜனை பீடாபிஷேகம் ஆகியன இடம்பெற்று பிற்பகல் திருமுறை முற்றோதல் கந்தபுராணப் படிப்புஎன்பனவும் மாலை ஆர் சண்முகசெந்தனின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (உ)

## 'ஸ்பார்ட்டக்கஸ்' நாடக ஆற்றுகை நாளை முதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலா மன்றத்தினால்முதல் தடவையாக நாடக உருவாக்கம் செய்யப்பட்டுள்ள 'ஸ்பார்ட்டக்கஸ்' நாடக ஆற்றுகை நாளை முதல் 3 தினங்கள் தினமும் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் ஆற்றுகை செய்யப் படவுள்ளது. (உ-6)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை சிவபூதவராயப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் இடம் பெறவுள்ளது. (உ)

## தென்பகுதி மக்களுக்கு இன்னமும்

# விடுதலைப்புலிகள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை

# தடைநீக்கமும் தற்போதைக்கு அவசியமில்லை

## சமயத் தலைவர்கள் பேரவை இவ்வாறு வலியுறுத்து

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க இணக்கப்பாடு ஒன்று எட்டப்படும் வரையில்விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கக்கூடாது என்று இலங்கையின் சமயத்தலைவர்களின் பேரவை தெரிவித்துள்ளது.

மேற்படி பேரவை நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தது மாதுலுவாவேசோபிததேரோ பேராசிரியர் பெல்லன்வில விமலரட்ன தேரோ, முரத்தெட்டுவே ஆனந்ததேரோ, பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் துணைத் தலைவர் எம்.பி. ஹிட்சூர் ரஹ்மன், அருட்தந்தையர் பெறேசர் ஜோசப், கலாநிதி மேர்வின் பெர்னாண்டோ ஆகியோர் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையில்அமைந்துள்ள கவேஷி பௌத்தநிலையத்தில் நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் சோபித தேரரும், பெல்லன்வில விமலரட்ன தேரோவும் கூறிய கருத்துக்களாவன,

விடுதலைப் புலிகள் மீது தென்பகுதி மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை வரவில்லை. இதனால் உடனடியாக அவர்கள் மீதான தடையை நீக்கக் கூடாது, ஆகக் குறைந்தது தாய்லாந்தில் நடைபெறும் முதற்கட்டப் பேச்சில்இணக்கம் காணப்பட்டால் அதன் பின்னர் தடையை நீக்குவது பற்றி பரிசீலிக்கலாம்.

இன்றைய சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை புலிகள்தான் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும். அரசாங்கம் இப்போதுபுலிகளுக்குபல்வேறு விடயங்களிலும் விட்டுக் கொடுத்து நடந்துள்ளது. இப்படியே புலிகளுக்கு எல்லாவற்றையும் விட்டுக் கொடுப்பதனால் பேச்சுவார்த்தை என்று எதுவும் தேவையே இல்லை.

இந்த நிலை நீடித்தால் சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்கள் எழுச்சி பெறலாம். எனவே இனியும் அரசு விட்டுக்கொடுப்புக்களை செய்யக்கூடாது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாணமுடியாது என்பதை நாம் உறுதியாக வலியுறுத்துகின்றோம். சமாதானப்பேச்சுக்களை முழுமையாக வரவேற்கின்றோம். பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே இறுதியானது.

பதவிக்கு வருவதற்கு முன்பு ரணில் விக்கிரமசிங்க கூறியது போன்று சமாதான முயற்சிகள் பற்றி சகல தரப்பினரதும் கருத்தை அறிந்துஅக்கருத்துக்களையும் உள்வாங்கி செயற்பட வேண்டும்.

இதேவேளைபுலிகள்மீதான தடை அமுலில் இருக்கும் போதே அவர்களுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டது. அதேபோன்று பேச்சுகளுக்கு முன்பு தடை நீக்கப்படவேண்டும் என்றுபுரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவும் இல்லை. அப்படி இருக்கும் போது தடையை நீக்கியாக வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும்கூறியுள்ளனர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முக்கியஸ்தர்களான இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் வண. ஒஸ்வல்ட்கோமிஸ், சிலாபம் ஆயர் பிராங்க் மார்க்கஸ், இலங்கை திருச்சபையின் அத்தியட்சர்டுலிப் சிச்கேரா, குஞ்சித பாதக் குருக்கள், ஜம்மியத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவிஎம்.ஜி.எம்.ரி. ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. (இ)

## மகளிர்க்கான வீட்டுத் தோட்ட அபிவிருத்திப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையின் கீழ் யாழ். பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீட்டுத் தோட்டம் செய்யும் மகளிர்களுக்கான விட்டுத்தோட்ட அபிவிருத்தி பயிற்சிநெறி ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது:

வீட்டுத் தோட்டத்தினை அபிவிருத்தி செய்வது, அதனை ஊக்குவிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சி நெறி முடிவில் பயிற்சியாளர்களுக்கு நல்லின விதைகளும், உள்ளீடுகளும் இலவசமாக விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது. (உ-6)

## குடாநாட்டில் சேதமடைந்துள்ள

# பாடசாலைகளைப் புனரமைக்க உலகவங்கி உதவி வழங்கவேண்டும்

### வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்படாமல் இருப்பதால் குடாநாட்டு மாணவர்கள் தமது கல்வியைப் பெறுவதில் பல இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் இப் பாடசாலைகளைப் புனரமைத்துத் தரமுன் வரவேண்டும்.

வடமாகாண அதிபர் சங்கத்தின் தலைவரான அதிபர் எஸ் சேதுபதி, சுண்டுக்குளி பஸ்ரியன் உணவக விடுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தஉலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடத்திய முக்கிய கலந்துரையாடலில் இவ்வாறுகுறிப்பிட்டார்.

மேலும் அங்குகுறிப் பிடுகையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் பாடசாலைகளின் பௌதிக வளங்கள் முன்னேற்றமடைந்துள்ளன ஆனால் எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகள்யாவுமே குறைகள் நிறைந்தனவாகவே இருக்கின்றன.

பெரும்பாலானபாடசாலைகளில் கல்விச் செயற்பாட்டு அறைகள் கூட நிர்மாணிக்கப் படவில்லை. இந்தநிலையில் கல்விச் சீர்திருத்தத்தினை அபிவிருத்தி செய்வது பற்றியோ அறிமுகம் செய்வது பற்றியோ எண்ணிப் பார்க்க முடியாத நிலையே காணப்படுகின்றது. எனக் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் பங்கு கொண்டிருந்த அதிபர்கள் பலரும் குடாநாட்டுக்கல்வித்துறையில் அதிபர்களால் எதிர்நோக்கப்படும் ஆசிரியர் தட்டுப்பாடுபௌதிகவளங்கள் இல்லாமை, மின்சாரக்கட்டணம் போன்ற விடயங்கள் பற்றி எடுத்துக் கூறியிருந்தனர். (உ-77)

## செயலகத்தில் நேற்று அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராய்வு

மாகாண சபையின் திட்டமிடல் அதிகாரிகள்குழுநேற்று யாழ். செயலகத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியது.

மாகாண சபையின் பிரதிச் செயலாளர் எஸ்.ரங்கராஜா, தொழில்துறைத்திணைக்களப் பணிப்பாளர் செல்வின் ஏரேனியஸ் ஆகியோர் உள்ளடங்கிய இக் குழுவுடனான கலந்துரையாடலில் யாழ். செயலக திட்டமிடல் மற்றும்புனர்வாழ்வுப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (உ-6)

## மிருசுவில்சோதனைச்சாவடி மாலை 5.30 மணியுடன் மூடப்படுவது ஏன்?

### படையினர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் சோதனைச் சாவடி மாலை 5 30 மணியுடன் மூடப்படுவது குறித்து விளக்கம் அளிக்கும்வகையில் பலாலி இராணுவமுகாம்ஊடகத்துறைப் பிரிவு கட்டளையிடும் அதிகாரி கப்டன் ஏ எச். பி.ஜே.த. சில்வாபத்திரிகைக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாவது,

மிருசுவில் சோதனைச் சாவடியில் இருந்து முகமாலை சோதனைச்சாவடியைசென்றடைய பயணிகளுக்கு சுமார் 20 நிமிடம் நேரம் எடுக்கும். ஆனால், முகமாலை சோதனைச் சாவடி, இலங்கைநேரப்படி மாலை 6 00 மணிக்கே மூடப்படுகிறது.

எனவே, மாலை 5.30 மணிக்குப் பின்னர் மிருசுவில் சோதனைச் சாவடியை அண்மிக்கும் பயணிகளுக்கு முகமாலை சோதனைச்சாவடியில் பாதுகாப்பற்ற பகுதிக்குச் செல்வதற்கானதமது அலுவல்களை முடித்துக் கொண்டு மாலை 6.00 மணிக்கு முன்னர் அந்தச் சோதனைச்சாவடியைகடந்து செல்லமுடியாத நிலை ஏற்படும்.

இதன் காரணமாகவே, பயணிகள் எதிர்நோக்கும்அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவேமிருசுவில்சோதனைச் சாவடிக்கு அப்பால் மாலை 5.30 மணிக்கு பின்னர்பயணிகள் பயணம் செய்ய படையினர் அனுமதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது. (உ)

## வலயக் கல்விப் பணிப்பாளர்களின்

# தலையீடு தலையிடியை ஏற்படுத்துகிறது

### 1 ஏ- பி பாடசாலை அதிபர்கள் உளக் குமுறல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 1ஏ பி பாடசாலைகளின் நிர்வாகங்களில் வலயக் கல்விப்பணிப்பாளர்களின் தலையீடுகளும் மேல் அழுத்தங்களும் அதிகரித்து வருகின்றன. இதனால் பாடசாலை நிர்வாகங்களைச் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயல்படுத்த முடியாமல் இருக்கின்றது. எனவே இத்தகைய பாடசாலைகள் சுயமாக இயங்குவதற்கு கல்வி உயர்கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நேற்றையதினம் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கல்விஉயர் கல்வி அமைச்சின் உயரதிகாரியான முத்து சிவஞானம்தலைமையில் நடைபெற்ற 1 ஏ.பி. பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிபர்களால் வலியுறுத்தப் பட்டது.

இதுவிடயம்பற்றி அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; வலயக்கல்விப்பணிப்பாளர்கள் பாடசாலைகளின் நிர்வாகங்களில் அதீத தலையீடுகள் மேற்கொண்டு வருவதால் அதிபர்கள் மிகவும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நாம் பாடசாலைகளை மிகவும் கஷ்டத்துக்குமத்தியில் நிர்வகித்து வரும்போது அனைத்து விடயங்களுக்கும் வலயப்பணிப்பாளர்களிடம் அனுமதியும் அங்கீகாரமும் பெறவேண்டியுள்ளது.

கல்விப்பணிப்பாளர்கள் எமக்குவேண்டிய ஆலோசனைகளை வழங்கலாம் ஆனால் அவர்களில் தங்கியிருக்கவேண்டியநிலை அவசியமற்றதாகும் எனவும்குறிப்பிட்டனர். (உ-77)

## பயிலுநர் தெரிவுத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்பிரதேசசெயலகத்தினால் நடத்தப்படும் தொழில் பயிற்சி நெறிகளை பயில விரும்புபவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-6)

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம் எப்படி?

யாரையும் ஏமாற்றவும் கூடாது. ஏமாந்து போகவும் கூடாது. அதற்கு மிகவும் சாமர்த்தியம் வேண்டும். ஓர் ஊரில் ஒரு பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலேயே வீணை வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரரர். அவருடைய வீணை வாசிப்பைக் கேட்டுவிட்டு ஒரு பெரிய மகாராஜா ஆள் உயரத்துக்கு ஒரு வீணையைத் தயார்பண்ணி அதை அந்த வித்துவானுக்கு பரிசாகக் கொடுத்துவிட்டார். அதன் பின்னர் அந்த வித்துவான் எந்த ஊருக்குப் போனாலும் அந்தப் பெரிய வீணையை எடுத்துக்கொண்டு போய்த்தான் வாசிப்பார். அவர் காலத்தில் வீணை வாசிப்பதில் அவர்தான் முதன்மையானவர். அதேபோல இன்னொரு வித்துவான் இருந்தார். அவர் கடம் வாசிப்பவர். கடம் வாசிப்பதில் அவரே முதன்மையானவர். இப்படி இவர்களிருவரும் அவரவர் வாசிப்பில் மிக உயர்ந்த நிலையில் இருந்தார்கள்! இருந்தாலும் அவர்களிடையே ஏதோ மனஸ்தாபம்.

இவர் போகின்ற கச்சேரிக்கு அவர் போவதில்லை, அவர் போகின்ற கச்சேரிக்கு இவர் போவதில்லை! இவர்களிருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைத்துக் கேட்கவேண்டும் என்பது ஜனங்களுடைய விருப்பம். இருப்பினும் அது நடக்காத காரியமாகவே இருந்தது. இரண்டு துருவங்களாக இருக்கிறவர்களை எப்படி ஒன்று சேர்க்க முடியும்? ஒரு கிராமத்துப் பண்ணையார் இருந்தார். பெரிய சவடால் பேர்வழி. இருந்தாலும் கௌரவத்துக்கு ஆசைப்பட்டவர். அவர் வீட்டில் ஒரு கல்யாணம் வந்தது. அவரின் பெண்ணுக்கே கல்யாணம். இந்தக் கல்யாணக் கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரண்டு பெரிய வித்துவான்களையும் கொண்டு வந்துவிட வேண்டும் என்று நினைத்தார். ஆனால் இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார், அவர் வருகிறார் என்றால் இவர் வரமாட்டாரே! என்ன செய்வது? யோசித்தார்.

'சரி' இவர் வருகிறார் என்ற விஷயத்தை அவரிடம் சொல்ல வேண்டாம். அவர் வருகிறார் என்பதை இவரிடம் சொல்ல வேண்டாம். இருவரிடமும் பொய் சொல்லி அழைத்துக் கொண்டு வருவோம், கச்சேரிச் சமயத்தில் திடீரென்று மேடையில் ஏற்றிவிட்டு விடுவோம். மேடையில் ஏறிய பின்னர் எல்லாருக்கும் முன்னால் சண்டைபோட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள்! 'என்று ஒருமுடிவுக்கு வந்தார். அதேபோன்று ஏற்பாடு செய்துவிட்டார். அதேவீணை வித்துவானையும்- கடவித்துவானையும் தனித்தனியாக ஒருவர் வந்திருப்பது இன்னொருவருக்குத் தெரியாமலே அழைத்துக்கொண்டு வந்து, இரண்டு தனித்தனி வீடுகளில் தங்கவைத்துவிட்டார்.

அன்றுமாலை கச்சேரி! இவர்கள் காலையிலேயே வந்து தங்கிவிட்டார்கள். ஆனால் அவர்கள் வந்து சேர்ந்த கொஞ்சநேரத்திலே உண்மையிலேயே, நடந்திருப்பது என்னவென்பது அரசல், புரசலாக அவர்களிருவருக்குமே தெரிய ஆரம்பித்து விட்டது. ஊரில் இதற்குள்ளே சிலர் இருப்பார்கள். ஒருவருக்கொருவரைப் பற்ற வைப்பதற்கென்று!. வீணை வித்துவான் யோசித்துப்பார்த்தார். கடவித்துவானை எப்படிக் கடத்துவது என்று பார்த்தார். உடனே அந்தப் பண்ணையாரைப்பார்த்து, இதோபாருங்கள் அந்தக் கடவித்துவானுடன் வாசிப்பதில் எனக்கொன்றும் கஷ்டமில்லை! இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்லவேண்டியது என்னுடையகடமை அவர் எத்தனை கடங்கள் கொண்டுவந்திருக்கிறார் கவனித்தீர்களா? என்றார்.

'கவனித்தேன். இரண்டு கொண்டுவந்திருக்கிறார்!' என்றார் இவர். 'அது எதற்கென்றால், ஒரு கடம் உடைந்துவிட்டால் இன்னொன்றை உபயோகிப்பதற்கும். ஒரு சுபகாரியத்தில் மேடையிலே பானைஉடைந்துவிட்டால் அது நல்லாயிருக்குமா? யோசித்துப் பாருங்கள் என்றார்.

'நீங்கள் சொல்வதுநியாயம் தான். நமது கச்சேரியில் கடமே வேண்டாம்' அந்த ஆளுக்குப் பேசிய பணத்தைக் கொடுத்துத் திருப்பி அனுப்பி வைத்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டு நேராக அவரிடம் போனார். பணத்தைக் கொடுத்துக் கணக்குத் தீர்த்துவிட்டு விஷயத்தைச் சொன்னார்.

'உடனேகடவித்துவான்இந்தப்பண்ணையாரைப்பார்த்து நீங்கள் சொல்வது சரி! இருந்தாலும் நானும் ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்றார். 'என்ன அது? என்றார் இவர். 'அந்தவீணை வித்துவானுடைய வீணை, ஆள் உயரம் உள்ளது' அதை அவர்மட்டும் தூக்க முடியாது. அந்தவீணை மீது பட்டுத்துணி போர்த்தி முன்பக்கம் இருவர், பின்பக்கம் இருவராக நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள், அதுபார்ப்பதற்கு எப்படியிருக்கு மென்று நீங்களே யோசித்துப் பாருங்கள் என்றார் பண்ணையார் யோசித்துப் பார்த்தார். பாடையைத் தூக்குகின்ற ஞாபகம் வந்தது. சுபமுகூர்த்தம் நடக்கின்ற வேளையில் இது தேவையா என்று யோசித்துப் பாருங்கள் என்றார் கடவித்துவான். பண்ணையார் யோசித்தார். என் வீட் கல்யாணத்துக்குக் கச்சேரியே வேண்டாம் என்று சொல்லிவிட்டு அவரையும் கணக்குத் தீர்த்து அனுப்பி வைத்துவிட்டார்.

இந்த மூவரிலும் யார்கெட்டிக்காரர் என்றுநினைக்கிறீர்கள்? ஒன்றுக்குஒன்று சளைத்ததில்லை. ●

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# இடைக்கால நிர்வாகத்தில் கிழக்கு முஸ்லிம்களுக்கு தனி அலகு தேவை

## முன்னாள் அமைச்சர் பேரியல் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபையில் கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு தனியான அலகு ஒன்று வேண்டும். இது விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினருடன் இணைந்து செயற்படப் போவதாக முன்னாள் அமைச்சரும் தேசியமுன்னணியின் தலைவியுமான பேரியல் அஷ்ரப் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது;

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு தனியான அலகு ஒன்று அமைத்துத் தருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எனது கணவரான மறைந்த முன்னாள் அமைச்சர் அஸ்ரப்பிற்கு உறுதிஅளித்திருந்தார். இது அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் தெரிந்த விடயமாகும். எனவே அமைக்கப்பட உத்தேசித்துள்ள இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம் மக்களுக்கு தனியான அலகு அமைக்கும் விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயல்படவுள்ளோம்.

அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள 18 வது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி எடுக்கும் தீர்மானத்துக்கு கட்டுப்பட்டு நடக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

# இராசி பலன்

29. 8. 2002
(ஆவணி 13, வியாழன்)
சஷ்டி பி.ப 2. 48 வரை
பரணி மு. இ 8. 51 வரை
ராகுகாலம்- 1. 35 –3.05
நல்ல நேரம் 7.35- 9.05

**மேடம்**
புதிய பொருள் சேர்க்கை, பெரியோர்ஆசி, நல்லமுயற்சி கற்பனை மிகுதி

**இடபம்**
கோபப்படுதல், பிதாவழி உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், சுபசெலவு

**மிதுனம்**
பெருமையான சம்பவம், நண்பர்கள் கலந்துரையாடல், காரிய தாமதம்

**கடகம்**
சுபநிகழ்ச்சி, உற்சாகமான நிலை, தொழில் பிரயாசை பிறர் உதவி

**சிங்கம்**
புதிய திட்டமிடல், வீண் டயம், உடல் உழைப்பு, திடீர் பயணம்

**கன்னி**
போசனசுகம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தாமதம், மனக்கிலேசம்

**துலாம்**
அபூர்வ சந்திப்பு, கௌரவம், திடீர்பயணம், பொருள் சேர்க்கை

**விருச்சிகம்**
சுகவாழ்வு, குடும்பத்தில் சந்தோசம், காரிய சித்தி, செய்தொழில் விருத்தி

**தனுசு**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, உறவினர் மனஸ்தாபம்

**மகரம்**
மாணவர் கல்விச் சிறப்பு, ரோகபயம், பகைவர் நேசம், முயற்சி தாமதம்

**கும்பம்**
கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பொருள்சேர்க்கை, சுவாரஸ்யம்

**மீனம்**
மாதர் நட்பு, கௌரவக் குறைவுமுயற்சி தாமதம்விவாதம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# வடக்கைக் கட்டியெழுப்ப 500 மில்லியன் டொலர்

## சர்வதேசத்திடம் ஜயலத் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் அழிந்து போயுள்ள வடபகுதியை புனரமைப்புச் செய்து கட்டி எழுப்புவதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச உதவியாக தந்துதவுமாறு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா கோரியுள்ளார்.

வடபகுதியை மீளக் கட்டி எழுப்பும் ஐந்து வருடத்திட்டத்தின் கீழ் இந்த நிதி உதவிகளைத் தந்துதவுமாறும் அமைச்சர் ஜெயவர்த்தனா கோரியுள்ளார். (ம)

# சமாதான முயற்சிக்கு அதிமேற்றிராணியார் ஆதரவு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறும் அதற்கு தாம் பூரண ஆதரவும், ஆசியும் வழங்குவதாகவும் கொழும்பு அதிமேற்றிராணியார்கலாநிதி ஒஸ்வோல்ட் தோமிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம்மேற்றிராணியாரைச் சந்தித்து சமாதானமுயற்சிகள்தொடர்பாக கலந்துரையாடினார். இச் சந்திப்பின்போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்தும் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவது குறித்தும் பிரதமர் விளக்கிக் கூறினார். (த)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி அகில இலங்கை கம்பன் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் தெய்வீக சொற்பொழிவில் இன்று "பெண்பாற் புலவர்கள்" என்னும் பொருளில் எஸ். ஸ்ரீதரனின் தெய்வீக சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (உ-3)

# இன்று

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் பதினேழாம் நாளான இன்று எ.கே. கருணாகரனின் பாட்டுக்கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் நடைபெறவுள்ளது. (உ-3)

# பாதாள உலகத்தினருக்கு இராணுவ சீருடைவழங்கிய படைஅதிகாரி கைது

(கொழும்பு)

பாதாள உலக கோஷ்டிகுழுவொன்றுக்கு இராணுவச் சீருடைகளை வாடகைக்கு வழங்கிவந்த இராணுவ அதிகாரிஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதி பொலிஸ்மாஅதிபர் சிறிசேனஹேரத் தலைமையிலான விசேடஅதிரடிப்படையினரே இவரைக்கைது செய்துள்ளனர்.

இவ்இராணுவச் சீருடையைப் பயன்படுத்தி சுமார்15 பாரிய கொள்ளைச்சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனவிசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விசாரணைகளின்போது இராணுவத்தினரின் கொமாண்டோ படையணிக்குரிய சீருடைகள் பலவும் தம்மிடம் உள்ளதாகஇவர்கள்கூறியதை அடுத்து பொலிசாரால் இச்சீருடைகளும் கைப்பற்றப்பட்டன. (உ-8)

# எதிர்வரும் 10ஆம்திகதிமுதல் தெல்லி.யூனியன் கல்லூரி சொந்த இடத்தில்இயங்கும்

(தென்மராட்சி)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் அதன் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது என கல்லூரியின் அதிபர் புண்ணிய சீலன் தெரிவித்துள்ளார்.

இக் கல்லூரியினை அண்மையில் தான் பாதுகாப்புப் படையினர் கல்லூரி நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பாடசாலைக் கட்டடங்களுக்கு எதிர் பார்த்த படி பெரும் சேதங்கள் அழிவுகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை கந்திருந்த உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கல்வி அமைச்சு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் இக் கல்லூரியை நேரில் சென்று பார்வையிட்டனர். (உ-77)

# பிணையில் விடுதலை

(வவுனியா)

நாரந்தனையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில்கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த ஜீவா வவுனியா மேல் நீதிமன்ற நீதவான் இராமச்சந்திரனின் உத்தரவின் பேரில் தலா 50 ஆயிரம் ரூபா இரு ஆட்பிணையில் கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார். (ம)

# ஈராக் மீது தாக்குதல் நடத்துமுன் நேச நாடுகளுடன் ஆலோசனை

## அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்மீதான தாக்குதலுக்கு முன்நேசநாடுகளுடன் இவ் விடயம் குறித்து கலந்தாலோசனை ஒன்றை நடத்தப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான சவுதித் தூதுவர் இளவரசர் தண்டவில் சுல்தானை தனது ஒய்வு கால பண்ணையில் வைத்து சந்திக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா நடத்த திட்டமிட்டு வருவதை சவுதி அரேபியா எதிர்த்து வருகின்றது.

இவ் எதிர்ப்புணர்வை தடுக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி புஷ் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளார் என சவுதி அரேபிய அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-8)

# அரசு-புலிகளுக்கு மண்டேலா பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சு வார்த்தைக்கு முன்வந்திருப்பதை தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பாராட்டியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு என்பின்டன் திரையரங்கில் மேடையேறிய 'மண்டேலா' என்னும் தனது வாழ்க்கை வரலாறு தொடர்பான நாடகம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்கும் என்றும் மண்டேலா தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# உலக தரிசனம்

## ஈராக்மீது தாக்கும் அமெரிக்க திட்டத்துக்கு இந்தியா எதிர்ப்பு

(புதுடில்லி)

ஈராக்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டிருப்பதை இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்க வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்தியா-அமெரிக்காஇடையானஉறவுகள் பலம்அடைந்துஇருக்கின்றபோதிலும் எந்தவொரு நாட்டின் மீதும் அமெரிக்கப் படைப்பலம் பிரயோகிக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை,

எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் ஆயுத, படைப் பலம் பிரயோகிக்கக்கூடாது என்ற கொள்கையில் இந்தியா தெளிவாகஇருக்கிறது.

குறிப்பாக ஆட்சியொன்றை கவிழ்க்கும் நோக்கத்துடன், மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கையை நாம் நிராகரிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## சாராய விற்பனை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

திக்கம் மற்றும் நவாலி வடிசாலைகளின் சாராய விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் இருந்து தரைவழிப்பாதையூடாக சாராயம் எடுத்துவரப்படுவதேஉள்நாட்டுச் சாராயத்திற்கான விற்பனையில் வீழ்ச்சி ஏற்படக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது, (உ-2)

## 19 வருடகால சூடான் யுத்தம் அடுத்த மாதம் முடிவுக்கு வரும்

(கார்டும்)

சூடானின் 19 வருடகால யுத்தம் அடுத்தமாதமளவில் முடிவுக்கு வரும்என அந்நாட்டு ஜனாதிபதி ஓமர் அல்ஹாசிம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சூடானின்பிரபலபத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சூடானிய அரசுக்கும், சூடான் மக்கள் விடுதலை இராணுவத்துக்கும் இடையிலான இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தைகள் தற்போது வெற்றிகரமாக கென்யாவில் நடைபெற்று வருகின்றன. இப்பேச்சு வார்த்தைகள் அடுத்தமாத நடுப்பகுதியில்முடிவடையவுள்ளன.

இருதரப்பினருக்கும் இடையிலான முதற்சுற்றுப் பேச்சு வார்த்தை கடந்த ஜூலை மாதத்தில் நடைபெற்றது தெரிந்ததே. (உ-8)

## கொலம்பிய புதிய அதிபர் இராணுவ தளபதிகளுக்கு கடும் எச்சரிக்கை

(பொஹோரா)

கொலம்பிய இராணுவ தளபதிகள் அனைவரும், தமது கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும் அல்லது தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும் என புதிய ஜனாதிபதி அன்வரோ புரீட் அறிவித்துள்ளார்.

கொலம்பியாவில் கெரில்லாக்களின் நடமாட்டம் அதிகரித்து வருவது தொடர்பாக கிடைத்த தகவலை அடுத்து, ஜனாதிபதி புரீட் தொலைக்காட்சி யூடாக இராணுவத் தளபதிகள் அனைவருக்கும் இவ் எச்சரிக்கை கலந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கடந்த 38 வருட காலமாக கொலம்பியாவில் நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதியளித்து தேர்தலில் வெற்றியீட்டிய கொலம்பியாவின் புதிய ஜனாதிபதி கடந்த 7 ஆம் திகதியே தனது பதவியை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பளை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வு மிக மந்தம்

### அடிப்படை வசதிகள் அங்கு ஏற்படவில்லை

(தென்மராட்சி)

பச்சிலைப் பள்ளி- பளை பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 680 குடும்பங்கள் மட்டுமே மீளக்குடியமர்ந்துள்ளன. 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இப் பகுதியில் ஏற்பட்ட இடம்பெயர்வின் போது மொத்தமாக 2 ஆயிரத்து 350 குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறின.

இங்குள்ள மொத்தம் 18 கிராம சேவையாளர் பிரிவுகளுள் 16 பிரிவுகளில் மட்டுமே மீள்குடியமர்ந்துள்ளன.

இருப்பினும், மீள்குடியமர்வு வேகம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. கிளாலி, முகமாலை ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் மீள்குடியமர்வுக்கு அனுமதி வழங்கப்படாமை காரணமாக குடும்பங்கள் அங்கு செல்ல முன் வரவில்லை.

இதேவேளை, பளை அரசினர் வைத்திய சாலை இன்னமும் மீளவும் செயல்பட ஆரம்பிக்கப்படாமையினால், மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமது மருத்துவ தேவைகளுக்குப் பெரும் கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளன.

பளை பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, மற்றும் மூன்று கூட்டுறவுக் கிளைகளும் அங்குஇயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தபாலகம் இன்னமும் கரவெட்டியிலேயே இயங்கிவருவதால் பளையில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான மாதாந்த பொதுஜன உதவிப் பணத்தினை தபாலக உத்தியோகத்தர்கள் அண்மையில்பளைக்குச்சென்று வழங்கினர்.

புலோப்பளை, வேம்பொடுகேணி, சோரன்பற்று. மாசார், ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் இயங்கவுள்ளதுடன்,

பச்சிலைப் பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகமும் மிகவிரைவில் அங்கு செயல்பட ஆரம்பிக்கும் என சங்கத்தின் தலைவர் எஸ். சுந்தரலிங்கம் தெரிவித்தார். (உ-77)

## உகண்டா தீவிரவாதிகள் யுத்தநிறுத்தத்தை மீறினர்

(கம்பாலா)

உகண்டா எல். ஆர் ஏ. தீவிரவாதிகள் கிராமமொன்றினைத்தாக்கி அங்கிருந்து 17 பொதுமக்களை கடத்திச் சென்றுள்ளனர் என உகண்டா இராணுவப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று உகண்டா அரசுக்கும் இத் தீவிரவாதிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தப் கைச்சாத்திடப்பட்டு சிலமணி நேரங்களுக்குள்ளேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது:

உகண்டா அரசுக்கும் எல். ஆர். ஏ. தீவிரவாதிகளுக்கும் இடையில் கடந்த 15 வருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலேயே இவ்விரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தை அடுத்து உகண்டா அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இருந்துவந்த சுமூகமான உறவில் சற்று விரிசல் நிலை ஏற்பட்டுள்ளதாக உகண்டா இராணுவப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

## அத்தியாவசியமான மருந்துகள் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 28 வகையான அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவி வரும் இத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு, இந்தியா போன்ற நாடுகளிலிருந்தும், பகிரங்கச் சந்தைகளில் இருந்தும்இம்மருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளது என அரசாங்க மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரேசாரணசிங்க தெரிவித்துள்ளார்; (உ-8)

## சட்ட விரோதமாக குடியேறச் சென்ற 73 பேர் ஸ்பெயினில் கைது

(மாட்ரிட்)

ஸ்பெயினில் சட்ட விரோதமாக குடியேறுவதற்காக சென்ற 73 பேரை அந் நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸ்பெயினின் கனல் தீவில் 3 படகுகளில் சென்று கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறுசட்டவிரோதமாக குடியேறச் சென்றவர்களில் 11 கற்பிணிகளும் சிறுவர்களும் இருந்ததாகவும்,

இவர்கள் இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அந் நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-8)

## தாய்லாந்தில் சமாதானப் பேச்சு

# புலிகள் பிரதிநிதிக் குழுவுக்கு தலைவர் பாலா, செயலாளர் அடேல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகளின்பிரதிநிதிகள்குழுவுக்கு அரசியல்ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன்பாலசிங்கம் தலைமை தாங்கவுள்ளதாக தெரியவருகிறது;

அடுத்தமாதம்16 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள இப்பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு செயலாளராக அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் கடமையாற்றவுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சர்வதேசவிவகாரங்களுக்கான சட்ட ஆலோசகர் வி. உருத்திரகுமார், அபிவிருத்திதுறை நிபுணர் கலாநிதி ஜே மகேஸ்வரன் ஆகியோரும் இக்குழுவில் அங்கம்வகிக்கவுள்ளனர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது அரச தரப்புக்குழுவில் யார் யார் அங்கம் வகிக்கின்றனர் என்ற விபரத்தை அரசு தரப்பு இன்னமும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.
குறள்

வலம்புரி

# இறைமை காப்பது அவசியம்!

பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் இறைமையைப் பாதுகாப்பதில்கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் விட்டதவறை அவர்களுக்குப் புள்ளடியிட்ட தமிழ் மக்கள் வாழ்க்கையில் அனுபவித்துவிட்டனர்.

பாராளுமன்றில் சட்டவாக்கங்கள் கொண்டு வருகின்றபோதெல்லாம் அதுபற்றி ஆராயாமல், ஏதோ புள்ளடியைப் போடுவதுதான் பாராளுமன்ற உறுப்பினரின் கடமைஎன்பதுபோல் தமிழ்ப் பாராளுமன்றஉறுப்பினர்கள் நடந்து கொண்டனர். இதன் காரணமாக தமிழ் மக்களுக்குஎதிரான சட்டவாக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்தகையதோர் சூழ்நிலை மீண்டும்ஏற்படாத வகையில் தற்போது பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் செயற்படுவது அவசியமாகும்.

இலங்கையின் கடந்த 50 வருட கால அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு சாதகமான அரசியல் யாப்புகளோ, சட்ட திருத்தங்களோ கொண்டு வந்ததாக வரலாறில்லை. அவ்வாறு கொண்டு வரப்பட்டாலும் அவை பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் வெற்றிகரமாக பின்வாங்கப்பட்டு விடும்.

இத்தகைய சூழ்நிலை இனியும் ஏற்படாத வகையில் மிக விழிப்பாகச் செயற்படுவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமையாகும். அவ்வகையில் தற்போது பாராளுமன்றில் கொண்டு வரப்படவிருக்கும் அரசு மீதான நம்பிக்கை, 18வது திருத்தச் சட்டமூலம்ஆகியவற்றில் பேனை எங்கே? புள்ளடித் தாள் எங்கே என்று கேட்காமல் சற்று நிதானமாகச் சிந்தித்துதமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும். எழுந்தமானமாக முடிவுகளை எடுத்து விட்டு பின்னர் மேடைகளில் நின்றுதிருகுதாளப் பேச்சுக்கள் மூலம் மேடைக்கு முன்னால் இருக்கும் பத்துப் பதினைந்து பேரைச் சமாளித்து விட முயற்சிக்காது தமிழர்களின் உரிமையை பாதுகாக்கும் நோக்குடன் செயற்பட வேண்டும்.

# எந்தச் செல்வத்தையும் உண்டுபண்ணுகின்ற ஆற்றலினைக் கொண்டது அறிவுச் செல்வமே

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

செல்வம் பல வகை அதில் அறிவு ஒரு வகை எனக் கூறலாம். இதனால் அறிவும் ஒரு செல்வம் என்றாகிறது. இதை விட 'அறிவேசெல்வம்' என்பது தான்பொருத்தமானதாக இருக்கும். எச்செல்வமும் இல்லாத ஒருவனிடம்அறிவுச் செல்வம் ஒன்றிருந்து விட்டால் அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றவனாவான் எல்லாச் செல்வங்களும் பெற்ற ஒருவன்அறிவுச் செல்வத்தைப் பெறாதவனாக இருந்தால், அவன் எல்லாச் செல்வங்களையும் இழந்தவனாகி விடுவான்.

### அறிவில்லாதவர் எதுவு மற்றவர்

எந்தச் செல்வத்தையும் உண்டுபண்ணும் ஆற்றல் அறிவுச் செல்வத்திற்கு உண்டு பிற செல்வங்களுக்கு இந்த ஆற்றல் இல்லை. இதனாலேயே வள்ளுவர் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' எனக்கூறினார். செல்வங்கள் அனைத்துமோ சில செல்வங்கள் மட்டுமோ, அல்லது தனித்த ஒரு செல்வமோ அறிவற்ற மக்களிடத்தில் நில்லாது என்பது வள்ளுவர் கருத்து இதனை 'அறிவிலார் என்னுடையரேனும் இலர்' என்பதால் நன்கு அறியலாம்.

பிற செல்வங்களைப் பெற்றவன் தன்னையும் காப்பாற்றிக்கொண்டு அவற்றையும் காப்பாற்றியாக வேண்டும். ஆனால் அறிவுச் செல்வமானது தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டு, தன்னைச் சார்ந்தவனையும் காத்து நிற்கும் ஓர் அருஞ்செல்வமாகும். பல செல்வங்கள் காலத்தால் அழியக்கூடியன. சில செல்வங்கள் பகைவரால் அழிக்கக்கூடியன. இன்னும் சில செல்வங்கள் தானே அழிந்து விடக் கூடியன. ஆனால் அறிவுச் செல்வமோ எப்போதும் அழியாததும் எவராலும் அழிக்க முடியாததுமாகும்.

### மனமும் அறிவும்

மனம் வேறு அறிவு வேறு 'மனமே அறிவு' என மயங்குவர் சிலர் மனம் மயங்கும். அறிவுமயங்காது; மனம்கலங்கும் அறிவுகலங்காது. மனம் வாய்க்காலில் ஓடும்நீர். அறிவு அதன் இரு கரைகள் மனம் குதிரை. அறிவு குதிரை யோட்டி மனம் குதிக்கும் அறிவு அடக்கும். மனம் ஆசைப்படும். அறிவு அதைத் தடுக்கும், மன்- நினைவு, மனம் - நினைப்பது மனனம்-நினைத்துக் கொண்டேயிருப்பது மனிதன். மனத்தின் வழிச் செல்பவன் என்றாவான். அவ்வாறு செல்லாமல் அறிவு வழிச் செல்பவரே 'அறிஞர்' எனப்படுவர். அறிவை அறியாதவர் சிலர் அறிந்தும் அதனை அடையாதவர் சிலர்; அடைந்தும் அதனை வளர்க்காதவர் சிலர்; வளர்த்தும் பயன்படுத்தாதவரோ பலர் இந்த நால் வகையினரையும் 'அறிவிழந்தவர்' என அறிவைப் பெற்றவர் கூறுவர்.

### அறிவிழந்தோர்

அறிவை இழந்தவர் மானத்தையும் இழப்பர் அவரை 'உயிரிழந்த உடல்' எனக் கூறலாம் கூறிப் பயன்? உயிரிழந்த உடல் அழிந்தொழிந்து போய்விடும். இது அழிந்து ஒழியாமல் அலைந்து திரிந்து கொண்டேயிருக்கும். உயிரிழந்த உடல் காடுகளிற்கிடந்தால் நாய், நரிகளுக்கேனும் உதவும். இது நாட்டின்நடுவிற் கிடந்தாலும் யாருக்கும் எதற்கும் உதவாது உயிரிழந்த உடலை அதன் உறவினர் கண்டால் அதனை எரித்தோ, புதைத்தோ அழுது வருந்துவர். ஆனால், இதன் உறவினர்களோ எரிக்காமலும் புதைக்காமலும், அழாமலும் பார்த்துக் கொண்டேயிருப்பர். அதிகம் கூறுவானேன். உயிரிழந்த உடலுக்கு உற்ற நண்பர்கள் இருந்தால் மலர் மாலையிட்டுப் போற்றுவர். ஆனால் இதற்கு உற்ற நண்பர்கள் இருந்தால் வெறுத்தே ஒதுக்கிவிடுவர். ஆகவே அறிவிழந்த மக்களை உயிரிழந்த உடல் எனக் கூறுவது ஒரு போதும் பொருந்தாது.

### அறிவுடையோர்

அறிவுடையவர்கள் எத்தகைய மக்களையும் நட்பாக்கிக் கொள்வார்கள். அது மட்டுமல்ல பெற்ற அந்நட்பைக் குறைத்துக் கொள்ளாமலும் வளர்த்துக் கொள்ளாமலும் ஒரே மாதிரியாக வாழ்ந்துவருவர். அறிவிழந்த மக்களால் இது ஒரு போதும் இயலாது. அறிவுடையார் கண்ணாற் காணமுடியாததையும் காண்பர். காதால் கேட்கமுடியாததையும் கேட்பர். அது மட்டுமல்ல பின்னால் என்ன வரும்? என்ன நேரிடும்? என்பதைக் கூடமுன் கூட்டியே அறிவர். அறிவுச்செல்வத்தை இழந்தவர்களால் இது இயலாது. வில், அம்புகளைக் கண்டாலும், வேல் அம்புகளைக் கண்டாலும் அறிவுடையோர் அஞ்சுவதில்லை. எதற்கும் அஞ்சாத இவ் வீரர்கள் பழிபாவங்களைக் கண்டால் பெரிதும் அஞ்சி நடுங்குவர். அறிவுடையோர் அதிகமாகப் பேசுவதில்லை. குறைவாகப் பேசினும், எதிரியின் உள்ளத்திற் பதியுமாறு தெளிவாகப் பேசுவர். அதுமட்டுமல்ல, எதிரியின் பேச்சுக்களுக்குள் மறைந்து கிடக்கும் உண்மையையும் எளிதில் அறிவார். அவர்கள் ஏமாறுவதில்லை. எவரையும் ஏமாற்றுவதுமில்லை.

உயர்ந்தவர்கள் என்றுசொல்வதையெல்லாம். நம்புவதையோ, தாழ்ந்தவர்கள் என்று சொல்வதையெல்லாம் மறுப்பதையோ, நண்பர்கள் என்று சொல்வதையெல்லாம் ஏற்பதையோ, பகைவர்கள் என்று சொல்வதையெல்லாம் வெறுப்பதையோ அறிவுடையவர்களிடம் காணமுடியாது. இந்நால்வரின் சொல்களிலும் காணப்படுகிற உண்மைகளை மட்டும் ஆராய்ந்து வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அறிவுடையாரக்கு மட்டுமே உண்டு.

### கண்டதும், கேட்டதும் பொய்யாகும்

கண்ணாற் கண்டவைகளும் கூட அறிவுடையாரிடத்தில் பொய்த்துப் போவதுண்டு. கடலின் ஆழமானவிடத்துநீர் நீல நிறமாகத் தோன்றும். குறைந்த ஆழமுள்ளவிடத்து நீர் பச்சை நிறமாகத் தோன்றும். அலையிலுள்ள நீர் முத்துப் போன்று வெண்மை நிறமாகத் தோன்றும். இருகைகளிலும் அள்ளிப் பார்த்தால்நிறமற்று விளங்கும். உண்மை என்னவெனில் நீருக்கு நிறமில்லை என்பதே.

இதனால்கண்கண்ட உண்மையைக்கூட அறிவு மறுத்தறிவதைக் காணலாம். காதாற் கேட்பவைகளும் கூட அறிவுடையாரிடத்திற் பொய்த்துப் போவதுண்டு. சிவாஜிகணேசன் பாட்டுக் காதில் விழும். நிழற்படத்தில்கண்டதும்கேட்டதும் கூட நினைவிற்கு வரும் என்றாலும் பாடியது அவரல்ல, வேறு ஒருவர் என்பதும், அதுவும் இப்போது கேட்டது சொந்தக்குரலல்ல, ஒலிப்பதிவுஎன்பதுவுமே உண்மையாகவிருக்கும், இதனால் காதுகேட்டு அறியும் உண்மையைக்கூட அறிவு மறுத்தறிவதைக்காணலாம்.

சாதி வேற்றுமை கூறுபவர்முன் ''ஒன்றேகுலம்'' என்பவரும், சமயவேற்றுமை கூறுபவர் முன் ''ஒருவனே தேவன்'' என்பவரும். இட வேற்றுமை கூறுபவர் முன ''யாதும் ஊரே'' என்பவரும், இன வேற்றுமைகூறுபவர் முன் ''யாவரும்கேளிர்'' என்பவரும் அறிவுடையோராகக் காட்சியளிப்பர். அறிவுடையோர் எதனையும் நன்கு ஆராய்ந்தபிறகே செய்யத் தொடங்குவர். அறிவற்றவர் ஆராயாது செய்யத் தொடங்கிவிட்டுத் துன்புறுவதோடு பிறகு தமது செயலைஎண்ணியும் வருந்துவர். அறிவுடையோர் ஒருவர்க்கு வாக்களிப்பதாயின் நன்கு ஆராய்ந்த பின்னரே வாக்களிப்பர் வாக்களித்துவிட்டால் உயிர்போவதானாலும் செய்துகொடுப்பர். அறிவற்றோர் ஆராயாது வாக்களித்துவிட்டுப் பின்னால தானும் செய்யாமல், அவரையும் செய்து கொள்ளவிடாமல், தானும் துன்புற்று, அவரையும் துன்புறுத்திவருவர்.

''அறிவாளி ஒருவன் தன்னை அறிவாளி என நினைப்பது நல்லதல்ல'' என்பது ஓர் அறிவாளியின்கருத்து ''அதுதவறு'' என்பது நமது கருத்து. தன்னை அறிவாளி என நினைத்துக்கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால், மற்றவர்களை ''அறிவற்றவர்கள்'' எனக்கருதுவதுதான் தவறு ஏனெனில், அறிவு உளளவர், அறிவு அற்றவர் என எவரையும் பிரிக்க இயலாது. ஒவ்வொருவரும் அவரவர் துறையில் சிறிது அறிவுடையவராகவே காட்சியளிப்பர் ''எல்லாம் அறிந்தவரும், ஏதும் அறியாதவரும் இவ்வுலகம் மீது இல்லை'' என்ற தாயுமானவர் வாக்குஇதனை மெய்ப்பிக்கும்.

ஒருவரை அறிவு அற்றவர் என்பதைவிட அறிவு குறைந்தவர் என்பதே உண்மையானதாக விருக்கும். ''செல்வம்'' என்பது கூட அப்படியே, ஐந்து ஆயிரம் சொத்து உள்ளவன் 500 ரூபாய் சொத்துள்ளவனுக்குப் பணக்காரனே. ஆனால், அவன் 50 ஆயிரம் சொத்துள்ளவனுக்கும் ஏழைதானே! அவனும் ஐந்து இலட்சம் சொத்துள்ளவனுக்கு ஏழைதானே! இவர்களில்யார் 'செல்வர்' என்று எப்படிக் கூறுவது?

திருக்குறளில் 40-ம் அதிகாரத்தில்கல்விச் செல்வத்தை வற்புறுத்திக் கூறிய வள்ளுவர் 42-ல் கேள்விச் செல்வத்தை மிக உயர்த்திக் கூறி, பின்னரே 43-ல் அறிவுச் செல்வத்தை விளக்கிக் காட்டுகிறார். இதிலிருந்து அறிவுச் செல்வம் கல்விச் செல்வத்திலும், கேள்விச் செல்வத்திலும் மிகமிக உயர்ந்த செல்வம என்றாகிறது. தம்பி! நீ, அறிவுடையவனாக இருக்க விரும்புகிறாயா? அப்படியானால் அறிவுச் செல்வத்தைப் பெறு! பெரியோரை வணங்கு எளியோர்க்கு உதவு! பொருளைப் போற்று! உடலை ஓம்பு! நன்றாகப்படி! அதிகமாகக் கேள் பொறுமையாகச் சிந்தி, குறைவாகப் பேசு! ஒழுக்கமாக நட! ஆம், நட வெற்றி பெறுவாய்! அப்பொழுது தான் நீயும் அறிவுச் செல்வம் பெற்ற நன்மகனாய்த் திகழ்வாய்! உன்னைப் போன்ற அறிவுச் செல்வங்களை நிறைய பெற்றால் தான் பெற்ற நாடும், வளர்த்த மொழியும் சிறம் படையும்!.

## சாயி அருளமுதம்



நான் செயலாற்றாதிருப்பின என்னைத் தட்டிக் கேட்க ஒருவருமில்லை. செயலில் ஈடுபடாதகாரணத்தால் நான் இழப்பதற்கு ஒன்றுமில்லை. நான் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும் என்ற பெரிய தூண்டுதலும் எனக்கில்லை. இருப்பினும் நான் மிகவும் சுறுசுறுப்பாயிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். ஏனெனில் நான் உங்களுக்கு ஒரு உதாரணமாகவும், உந்து சக்தியாகவும் இருப்பதற்கும், உங்களைப்பயிற்றுவிப்பதற்கும் எந்நேரமும் உங்களுக்காக, ஏதாவது செயலில் ஈடுபட்டிருக்க வேண்டியுள்ளது. வழிகாட்டுபவர்கள் தாமே பின் தொடரவும் வேண்டும். உத்தரவிடுபவர்கள் மற்றவர்கள் எப்படி நடக்க வேண்டுமெனத் தாம் எதிர்பார்க்கின்றனரோ அதேபோலத் தாமும் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொரு கணப் பொழுதையும் ஒரு பொன்னான வாய்ப்பாக மாற்றியமைத்து தெய்வீகத்தை அடைய வேண்டும். என்பதற்காகவே நான் செயலில் ஈடுபட்டிருக்கிறேன்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# G.A.Q, 1st in Com. 2003 | 2004

## யாழ் பல்கலைக்கழகம் பேராதனை

(வெளிவாரி)

★ மேற்குறிப்பிட்ட பட்டப்பாட நெறிக்கு A/Lல் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

★ இப்பட்ட பாடநெறிக்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விரிவுரைகள் ஆரம்பம் 01-09-2002 (8 மணி)

★ விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு;

**ஸ்ரீ. அருள்நங்கை**

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(கி-4894)


# அரச அலுவலர்கள் கணனிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அரச அலுவலர்களுக்கான தொலைக்கல்வி கணனிப் பயிற்சி நெறியை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடாத்தி வருகிறது.

அந்தவகையில் நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள கட்வாஸ் கணனிப் பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சிநெறி தற்போது நடத்தப்படுகிறது.

ஒரு கிழமையில் 1நாள்படி 3வாரத்திற்கு பயிற்சி காலை 9.00மணியிலிருந்து மாலை 4.00மணி வரை நடத்தப்படுகிறது.

இங்கு ஆரம்பத்திலிருந்து பிரயோகம் வரை கற்பிக்கப்படுவதால் ஆர்வமுடைய அரச அலுவலர்கள் தங்கள் பெயர்களை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்குமாறு முகாமைத்துவ உதவியாளர் ப. ராகவன் கேட்டுள்ளார். (உ.6)

## யாழ்ப்பாணத்தில் ரி.வி.எஸ்.கம்பனி

(யாழ்ப்பாணம்)

ரி.வி.எஸ் மோட்டோர் கம்பனியின் சுசிக்கிறேட் யாழ் பிராந்திய விநியோகநிலையம் யாழ்.கன்னாதிட்டிச் சந்திக் கருகாமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை கம்பனியின் ஏற்றுமதி விற்பனை முகாமையாளர் கோபிநாத் திறந்து வைத்தார். (ந)

**யுத்தக்**

கைதிகளும் தத்தம் வசமுள்ள யுத்தக் கைதிகளை பரிமாற்றம் செய்து கொள்ள இணக்கம் கண்டிருப்பதானது அடுத்த மாதம் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சு வார்த்தைக்கு உந்துசக்தியாக இருப்பதுடன் இருசாராருக்குமிடையே நல்லெண்ண, பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்த வழிவகுக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே இடம்பெறவுள்ள யுத்தக் கைதிகள் பரிமாற்றம் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறலாம் என்று தமிழ் கார்டியன் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

**மட்டு**

அமைப்பில் உள்ள மட்டு அம்பாறைப் பிராந்தியத்தைச் சேர்ந்த பெண் போராளிகளைப் பெற்றோர் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இச்சந்திப்பின் போது புலிகள் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அடுத்தவாரமளவில் இராணுவம்- புலிகள் கண்காணிப்புக்குழுவினர். உட்பட முத்தரப்பினருடனான சந்திப்பொன்றை மட்டு.ஆயர் இல்லத்தில் நடத்துவதெனவும் இச்சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந)

**புலிகள் மீதான**

இது தொடர்பாகமக்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லக் கூடிய பதில்களை வழங்கிவருகின்றனர் என்றும் விமல் வீரவன்ச அந்த அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார். (ம)

**அரசு மீதான**

கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்போது பார்வையாளர்கள் முறைகேடாக நடந்துகொண்டதைஅடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கைப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக இன்று நடைபெறவுள்ள அனைத்துக் கட்சித்தலைவர்களின் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் எனப் பிந்திக்கிடைத்ததகவலொன்று தெரிவிக்கிறது. (த)

## தமிழீழ நீதிமன்று மரணதண்டனை விதித்தது

(வவுனியா)

வன்னிப்பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியை ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டமை தொடர்பாக தமிழீழ காவல்துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர்ஒருவரை தமிழீழ நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு மரணதண்டனைவிதித்துள்ளது.

இத்தீர்ப்பை அடுத்து பிரஸ்தாப நபருக்கு நேற்றுமுன்தினம் மதியாமடுவில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம)


# இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்விநிறுவனம்

## (இ.உ.தொ.நு.க.நி)

மூன்றாம் நிலைக்கல்வி பயிற்சி அமைச்சு

மட்டக்குளிய உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்காக உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாவுக்கான (*HNDE*) மாணவர்களை

## அனுமதித்தல் கல்வி வருடம் 2002/2003

இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்குச் (SLIATE) சொந்தமான மட்டக்குளிய உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுமதிக்காக பொருத்தமான தகுதியான மாணவர்களிடமிருந்து பொறியல் பாடநெறிககான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1 பாடநெறியின் விபரங்கள்**

உயர் தேசிய பொறியியல் பாடநெறி ஒரு முழுநேர ஆங்கில மொழி மூலமான மூன்று வருடப்பாடநெறியாகும். இதில் கொள்கை விளக்கங்களுடன் ஆறு மாத வெளிக்களப் பயிற்சியில் மூன்று பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அவை குடியியல்,மின்னியல் இயந்திரவியல் ஆகும்.

குறிப்பு:-

இப்பாடநெறிக்கான வெளிக்களப்பயிற்சி வெளிநிறுவனங்களில் வழங்கப்படும்போது ஆய்வுகூட பயிற்சிகள் நிறுவனத்தின் உள்ளே / கல்வி நிறுவனத்திற்கு வெளியேயும் தொழில் துறைகளிலும் நடாத்தப்படும்.

இப்பாடநெறியினைப் பயில்வோர் CEI (லண்டன்) பகுதி 1 பரீட்சைக்கான விதிவிலக்கினை திறமை அடிப்படையில் லண்டன் பொறியியல் பேரவையிடம் இருந்து பெற்றுக்கொள்கின்றனர்.

**2. அனுமதிக்குத்தேவையான தகைமைகள்,**

(1). அவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(2). இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2001 இல் அல்லது அதற்கு முதல் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் கீழ்வரும் பாடங்களில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (அ) பிரயோகக் கணிதம் | இல்லாவிடில் | (அ) இணைந்த கணிதம் |
| (ஆ) தூய கணிதம் | | (ஆ) இரசாயனவியல் |
| (இ) பௌதீகவியல் | | (இ) பௌதீகவியல் |
| (ஈ) இரசாயனவியல் | | (ஈ) பொது அறிவு |

(3) க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 23 வயதினைவிட குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**3. தெரிவு செய்யப்படும் முறைமை**

(அ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அல்லது 'இசட்' ஸ்கோர் (புள்ளி முறை)

(ஆ) ஓர் நேர்முகப்பரீட்சை.

பல்கலைககழகம் ஒன்றின் உள்ளக மாணவர். இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி / தொழில்நுட்பக் கல்லூரி அல்லது எந்தவொரு உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவரும் விண்ணப்பிப்பதற்கு பொருத்தமற்றவராவார்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வார நாட்களிலும் தேவையேற்படின் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பக் கட்டணம் ரூ 100ஐ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கொழும்பு பார்க் வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் அல்லது ஏதாவதொரு கிளையில் நடைமுறைக் கணக்கிலக்கம் 0025-1010129111 வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையினை கீழே இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை அனுப்பி வைக்கும் போது இடது பக்க மேல்மூலையில் 'உயர் தேசிய பொறியியல் டிப்ளோமாவுக்கான விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ளல்' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி 2002 செப்ரெம்பர் 15 என்பதையும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி 2002.செப்ரெம்பர் 30 என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

கல்வி வருடம் 2002 / 2003 க்காக மட்டக்குளிய கல்வி நிறுவனத்திற்கு மாணவர்களை அனுமதித்தலில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர்நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

-பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,
94, வார்ட்பிளேஸ்,
கொழும்பு 07,


# விலக்குப்பிடிக்கச்சென்றவர் குத்திக் கொலை

## கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதிக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற குடும்பத் தகராறில் விலக்குப் பிடிக்கச்சென்ற நபர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே பலியானார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது தெய்வேந்திரன் யசோதரன் (வயது 23) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

கொலை செய்யப்பட்டவரின் சடலத்தை யாழ்ப்பாண பொலிசார் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தபின் கொலைச் சந்தேக நபர்களான தகராறில் ஈடுபட்ட கணவனையும், மனைவியையும் நேற்று நண்பகல் கைது செய்து யாழ். பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். இச்சந்தேக நபர்கள் இருவரும் இன்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க கொலை செய்யப்பட்டவரின் மரண விசாரணையை மேற்கொண்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ். இளங்கோவன் சடலத்தை அவரது மனைவியான நகுலேஸ்வரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ம- 6, 19)

இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29-8-2002ல் வெளியிடப்பட்டது.